mittee, Tirupattur, North Arcot District, regarding a dispute over the Land in T. S. No. 502 belonging to the temple between the Hindus and Muslims of the locality ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) அம்மனு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இத்துடன் ஒரு விளக்கத்தையும் சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன். 850 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மகானுடைய சடலம் அடக்கம் செய்யப்பட்டதாகச் சொல்லப் படும் அந்த இடம் அரசாங்க புறம்போக்குக்குச் சொந்தமானது. அங்கு 23–2–1970 அன்று ஒரு விநாயகரைக் கொண்டுவந்து, திடீரென்று கீற்றுக்கொட்டகை போட்டிருந்தார்கள். சமீபத்திலே நான் திருப்பத் தூருக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது பக்தர்கள் என்னைச் சந்தித்தார்கள். முஸ்லீம்கள் மத்தியில் இருக்கும் பகுதியில் பிள்ளையார் கோயிலை வைப்பது நல்லது அல்ல என்று வருத்தம் தெரிவித்தார்கள். வேறு ஒரு இடத்தை அரசாங்கத்தின் மூலம் கட்டிக்கொடுத்தால் அங்கு விநாயகரை வைத்துக்கொள்ளலாம் என்ற யோசனை சொல்லப்பட்டது. கட்டும் பொறுப்பை அவர்களே ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண் டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளகிறேன்.

ஆடு மாடுகளின் முடிகள் ஏற்றுமதி.

*4. வினா. **திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1969–70-ம் ஆண்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் கிடைத்த ஆடுமாடுகளின் முடிகள் எந்தெந்த மாநிலங் களுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : வட ஆற்காடு மாவட்டத்தில் 1969–70-ம் ஆண்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் விழும் ஆடுமாடுகளின் முடிகளில் பாதியளவு ஆஸ்திரேலியாவிற்கும், மேற்கு ஜெர்மனிக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. வாலாஜாபேட்டையிலுள்ள கம்பளி விரிப்பு உற்பத்தித் தொழிற்சாலைகளில் ஒரு பகுதி உபயோக மாயிற்று. மீதி மைசூர் மாநிலத்திற்கும் வட இந்தியாவிற்கும் அனுப்பப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மேற்கண்ட வெளிநாடுகளுக்கு அனுப்பும் முடியினால், அந்த ஆண்டில் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானத்தை அறிவிக்க இயலுமா? அந்த வருமானத்தை மேலும் பெருக்கிக் கொள்ள அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையினை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்திற்கு எதுவும் வரு மானம் கிடையாது. அவரவர்கள் விற்றுக் கொள்கிறார்கள். அரசாங்கத்தினுடைய விண்ணமங்கலம் யூனிட்டின் சார்பில் 460 டன் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக வெளிநாட்டுச் செலாவணி என்ற முறையிலே $7\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் கிடைக்கப்பெற்றிருக்கிறது.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, இந்த முடியை ஏற்றுமதி செய்வதுபோல, ஆடுமாடுகளின் தோல் எந்தெந்த நாடுகளுக்குச் செல் கிறது, எவ்வளவு மதிப்புள்ள தொகை அன்னியச் செலாவணியாக நமக்குக் கிடைக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது முடியைப் பற்றிய கேள்வி. தோலைப்பற்றித் தனியா கேட்க வேண்டும்.